

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகள கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க தலைவர் டபள்யூ.ஐ.தேவாரம் (ஓய்வு) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.09.2024) சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் தெற்காசிய தடகளக் கூட்டமைப்பின் (SAAF) ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியை கொடியேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, ஆசிய, தெற்காசிய, இந்திய, தமிழ்நாடு தடகள சங்க நிர்வாகிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத்தின் பவள விழா: அண்ணா பிறந்த நாள்

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் கழகத்தினர் வீடுகளில் கழகக் கொடியேற்றிடுவோம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!

சேலம், செப்.13 -

தி.மு.கழகத்தின் பவள விழா - செப்டம்பர்-15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கழகத் தோழர்கள் வீடுகளிலும் கழக கொடியை ஏற்றி பட்டொளி வீசிப் பறக்கச் செய்திடுவோம் என கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்:



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பேரியக்கம், அண்ணாவின் கொள்கைத்தம்பிகளால் வளர்க்கப்பட்டு அவரது தலையாய தம்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு மேல் கட்டிக் காக்கப்பட்டு, நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நமது உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கிற வேளையில் தி.மு.கழகம் பவள விழா நிறைவு பெறுகிறது. நம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆணைக் கிணங்க

இந்தியாவுக்கே முன்னோடியான பல திட்டங்களை வகுத்து, சட்டங்களை உருவாக்கி, இன்று இந்தியாவை வழிநடத்தக் கூடிய வகையில், தி.மு.கழகம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பெற்று திகழ்கிறது என்றால், அந்த பெருமை எல்லாம் நம் உயிராகவும் - உதிரமாகவும் திகழ்கின்ற தி.மு.கழகத்திற்கே உரியது.

இந்திய அளவில் தவிர்க்க முடியாத இயக்கமாக திகழ்கிறது தி.மு.க. எனும் பேரியக்கம், இந்த வரலாற்றுப் பெருமையில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரின் பங்கு அளப்பரியது.

75 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நிறைவு செய்த பேரியக்கம் வெற்றி - தோல்விகளை கடந்து, தனது இலட்சியப் பாதையில் உறுதி குலையாமல் பயணித்து வரும் தி.மு.கவுக்கு எத்தனை நெருக்கடிகள் வந்தாலும் அதனை எதிர்கொண்டு, முதுகு வளையாமல், தரையில் தவழாமல், நெஞ்சை நிமிர்த்தி நின்று, "நான் தி.மு.க.காரன், நான் கலைஞரின் உடன்பிறப்பு, தளபதியின் அன்புத் தொண்டன்" என்று கம்பீரமாகச் சொல்கின்ற துணிவும் வலிவுமே கழகத் தொண்டர்களின் அடையாளம்.

அந்த கம்பீரத்துடன், பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாகக் கொண்டாட வேண்டும்.

கழகத்தின் பவள விழா ஆண்டு கழகத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் - 15 அன்று காலை கழகத்தின் அனைத்து கிளைகளிலும் கழக கொடிக்கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்ற வேண்டும் என்றும்,

இந்த கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையில்,

கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசச் செய்திட வேண்டும் என்று நமது நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும் என கழக தலைவர் முதலமைச்சர் தளபதி அவர்களின் அன்பு கட்டளைக்கிணங்க,

கிழக்கு மாவட்ட ஒன்றியம் - நகர - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில் உள்ள அனைத்துக் கொடிக்கம்பங்களையும் வர்ணம் தீட்டி புதுப்பித்து வருகிற செப்டம்பர்-15 அண்ணா பிறந்த நாள்அன்று காலை 9.00 மணிக்கு அனைத்து கிளைகளிலும் கழக முன்னோடிகளை வைத்து, கழகக் கொடியை ஏற்றிடுவோம். ஒட்டு மொத்த கழக நிர்வாகிகள் செப்டம்பர் 15-ஆம் தேதி காலையிலேயே கழக கொடி ஏற்றி, கழக கொடி பட்டொளி வீசுவது பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்திட வேண்டும். "கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க." நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில், அனைவரின் இல்லங்களிலும் கழக கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு.கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்று கழகத்தினர் அனைவரையும் இரு கரம் கூப்பி கேட்டுக்கொளகிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர்.சிவலிங்கம் தமது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா! அறந்தாங்கியில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாலை!

## மாவட்டக் கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்

புதுக்கோட்டை செப். 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காக வும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் " இப்படை தோற்கின் எப்படை வெல்லும் " என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் "மெட்ராஸ் ஸ்டேட் " என்ற பெயரை " தமிழ் நாடு " என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர்



எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளான 15.9.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (அமைச்சர் எஸ்.ரகுபதி) தலைமையிலும், காலநிலை மாற்றம், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அது சமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.


